# பருவத் தேர்வு - 2

## மகிழ்ச்சி - எட்டாம் வகுப்பு

மதிப்பெண்கள் : 100 காலம் : 3 மணி

---

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.** 5 x 1 = 5

1. கபிலன் ஆடினான். – இத்தொடரில் "கபிலன்" என்பது _______________ ஆகும்.
2. "வன்மை" என்ற சொல்லின் பொருள் ____________.
3. மகிழும்படியாகப் பேசி நட்புக் கொள்ளுதலே ___________.
4. நிறம், சுவை, அளவு, வடிவம் என்பன ____________ ஆகும்.
5. இயல்பு நவிற்சி அணியின் மற்றொரு பெயர் ____________.

**II. பொருள் எழுதுக.** 5 x 1 = 5

1. ஒறுத்தார் – _________________
2. அவதி – _________________
3. அறம் – _________________
4. மாந்தர் – _________________
5. கடை – _________________

**III. பொருத்துக.** 5 x 1 = 5

| | |
|---|---|
| 1. கேட்ட பாடல் • | • தோன்றல் விகாரம் |
| 2. பலாக்காய் • | • எட்டாம் வேற்றுமை |
| 3. தென்குமரி • | • பெயரெச்சத் தொடர் |
| 4. அண்ணா! உதவி செய். • | • பி.டி. உஷா |
| 5. பையோலி எக்ஸ்பிரஸ் • | • திசைப்பெயரோடு பிறபெயர் |

**IV. பிரித்து எழுதுக.** **5 x 1 = 5**

1. நற்பெயர் – ____________________
2. தென்னாடு – ____________________
3. கல்வியறிவு – ____________________
4. வெள்ளாடு – ____________________
5. இன்றிரவு – ____________________

**V. சேர்த்து எழுதுக.** **2 x 1 = 2**

1. விடுதலை + உணர்வு = ____________________
2. அறம் + போராட்டம் = ____________________

**VI. எதிர்ச்சொல் எழுதுக.** **3 x 1 = 3**

1. வடக்கு x ____________________
2. அமைதி x ____________________
3. அச்சம் x ____________________

**VII. சிறுவினாக்களுக்கு விடையளி. (ஏதேனும் பத்திற்கு மட்டும்)** **10 x 3 = 30**

1. எழுவாய்த் தொடர் என்றால் என்ன?
2. செப்புப் பானையை எடுத்த நடு மகன் என்ன செய்தான்?
3. வாணிதாசன் இயற்றிய நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. உலக மக்கள் யாரை மனதுள் வைத்து மதிப்பர்?
5. புணர்ச்சி என்றால் என்ன?
6. அரசன் பாக்கியநாதனின் குண நலன்களை எழுதுக.
7. அறநூல்கள் கூறும் உயர்வைத் தருவது எது?
8. ஈறுபோதல் விதியை விளக்குக.
9. புத்தபிரானைக் கண்ட ஆயர்குலச் சிறுவன் செய்த உதவி யாது?
10. நிறைவேறினாலும் துன்பத்தை அளிப்பது எது?
11. குறளைப் பெருமைப்படுத்தி ஔவையார் கூறுவன யாவை?
12. ஐந்தாம் வேற்றுமையை விவரி.
13. ஆறு தூங்குகிறதா என்பதை அறிய என்ன செய்தனர்?
14. யாருக்கு உதவ வேண்டும்?
15. வணிகனின் குணம் யாது?

**VIII. பெருவினாக்களுக்கு விடையளி. (ஏதேனும் ஐந்திற்கு மட்டும்)** **5 x 7 = 35**

1. தொகாநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. வேலுநாச்சியார் ஆங்கிலேயர்களை எவ்வாறு வென்றார்?
3. தோன்றல் விகாரத்தை விளக்குக.
4. “நம் நாடு” பாடல் கூறும் செய்திகளை எழுதுக.
5. ‘மரக்கால்’ – எவ்வகை விதி என்பதை விவரி.
6. புத்தர் கூறிய அமுதமொழிகளைத் தொகுத்து எழுதுக.
7. தற்கிழமை, பிறிதின் கிழமையை விளக்குக.
8. இந்தியாவின் தங்கத் தாரகை யார்? ஏன் அப்படி அழைக்கப்பட்டார்?
9. உயர்வு நவிற்சி அணி என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
10. பின்வரும் குறட்பாக்களை அடி பிறழாமல் எழுதுக.
    அ. “அகழ்வாரைத் தாங்கும்” எனத் தொடங்கும் குறள்.
    ஆ. “பழிக்கும் வினை” என முடியும் குறள்.

**IX. கடிதம் எழுதுக. (ஏதேனும் ஒன்று மட்டும்)** **1 x 10 = 10**

1. கோடை விடுமுறையில் ஊருக்கு வருமாறு நண்பனுக்கு அழைப்பு மடல் எழுதுக.
2. இன்பச் சுற்றுலா குறித்து நண்பனுக்கு கடிதம் எழுதுக.
3. களவுபோன மிதிவண்டியை மீட்டுத்தரக் காவல்துறை அதிகாரிக்கு விண்ணப்பக் கடிதம் எழுதுக.